01-02-2019 OS.No.20/2012 .வா.சா.1 ஐய்யம்மாள்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி-(10ம் பிரதிவாதி தரப்பில்)

பிராது 1ம் தபசில் சொத்தில் 1 முதல் 29 அயிட்ட சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனார் ராமசுப்பு நாயக்கருக்கு பாத்தியம் என்று காட்டுவதற்கு வா.சா.ஆ-1 பட்டா எண்.497 ஐ தவிர்த்து வேறு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது 2ம் தபசில் 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களை பொறுத்து எனது தாயார் ஆவுடையத்தாய்ம்மாளுக்கு ாத்தியம் என்று காட்டுவதற்கு வா.சா.ஆ-2 பட்டா எண்.482 மற்றும் 42 ஐ தவிர்த்து வேறு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது 3ம் தபசில் 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களை பொறுத்து நான் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 14/05/1960 ந்தேதி ஐய்யப்பநாயக்கர், லெட்சுமியம்மாள்-1, சுப்பம்மாள்-2, எனது தாயார் ஆவுடைதாயம்மாள்-3 ஆகியோர்களுக்கு எழுதிக் கொடுத்த உயில் ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஐய்யப்பநாயக்கர் மகளான லெட்சுமியம்மாள், 10ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த 23/02/1996 ம் உயில் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயார் ஆவுடைதாயம்மாள் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா எண்.2198 இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 30/12/2008ல் என் தாயார் எவ்வித கிரைய ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் அது மோசடியான ஆவணமாகும். நான் என் கணவருடன் திருநெல்வேலியில்தான் இருந்து வருகிறேன். 2009ம் வருட தொடக்கத்தில் என் தாயாருக்கு புத்தி சுவாதீனம் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் மனநிலை பாதிக்கப்பட்டு பிற நபரின் துணையுடன்தான் வசித்து வந்தார் என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. என் தாயாரை பாதுகாக்க ஒரு வேலையாள அமர்த்தினேன்

என்று சொல்லியுள்ள நான் அந்த வேலையாளின் பெயர் தெரியுமா என்றால் குருவம்மாள் சமைத்து கொடுக்கவும், மற்றொரு வேலையாளான குருவு மற்ற வேலையை என் தாயாருக்கு செய்துகொடுப்பார். மேற்படி வேலையாட்களை 7, 8, 9 பிரதிவாதிகள்தான் வேலைக்கு அமர்த்தினார்கள் என்றும் அவர்கள்தான் சம்பளம் கொடுப்பார்கள் என்றால் நாங்களும் சம்பளம் கொடுப்போம். பிராது 2ம் தபசில் 5 மற்றும் 6 இன சொத்துக்களை பொறுத்து என் தாயார், சுப்பாராமன், திருப்பதி, ஐய்யப்பன், எல்லப்பன், குணாவெங்கட்ராமன், மதனகோபால் ஆகியோர்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அது மோசடியான ஆவணம் ஆகும். மேற்படி செட்டில்மெண்ட ஆவணம் பிறப்பித்து கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. நான் திருநெல்வேலியில் இருப்பதால் என் தாயாரை நான் பராமரிக்கவில்லை என்றும் 7, 8, 9 பிரதிவாதிகள்தான் வேலையாட்களை சம்பளம் கொடுத்த என் அம்மாவை பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மாதத்திற்கு 10 நாட்கள் என் அம்மாவை நான்தான் பராமரிக்க வருவேன். மாதம் 10 நாட்கள் வருவதை நான் எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் நல்லபடியாக செலவு செய்து திருமணம் முடித்துவைத்தார் என்றும் அதனால் பிராது தபசில் சொத்துக்களில் பாகம் எனக்கு கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல. 3/27 பங்கு எனக்கு பாத்தியம் என்று நான் பிராதில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. பிராது 1ம் தபசில் 29 அயிட்ட சொத்தான வீட்டை பொறுத்து எனக்கு எவ்விதமான பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. 8, 9, 10 பிரதிவாதிகள்தான் என் அம்மாவை பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எவ்வித வழக்குமூலம் கிடையாது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு

செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)A.K.பாபுலால்,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.